DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 127/2022

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | வெங்கடேசன் |
|---|---|
| Father / Husband Name | பாளையன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.02.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** ரூபாய் 5 லட்சத்தை எதிரியிடம் ரூபாய் 500/- தாள்களாக எனது அக்கா வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் 5 ஏக்கிரில் விவசாயம் செய்து வருகிறேன். நான் கடன் கொடுத்த காலத்தில் 2 ஏக்கரில் வேர்க்கடலை மற்றும் 3 ஏக்கரில் நெல் பயிர் விவசாயம் செய்தேன். கார்த்திகை மாதத்தில் அறுவடை செய்தேன். அது அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களாகும். நான் சொல்லும் காலத்தில் மழைப்பெய்ததால் அறுவடை செய்ய இயலாது என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு பயிர்களுமே மழைக்காலத்தில் அறுவடை செய்யமுடியும். நான் சொல்லும் காலக்கட்டத்தில் விவசாயம் மூலம் பணம் ஈட்ட முடியாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்கு 5 ஏக்கர் நிலம் மற்றும் வேறு கடைகள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

2. எதிரியின் முகவரி சரியாக தெரியாது. எதிரியின் முகவரியை எனது அக்கா சொல்லிதான் எனக்கு தெரியும். முகவரி தெரியாத நபருக்கு நான் ரூபாய் 5 லட்சம் கடனாக கொடுத்திருக்க முடியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு கட்டுமானத்திற்காக கொடுக்கப்பட்ட கடன் சம்மந்தப்பட்ட வீட்டு மதிப்பு மற்றும் வீட்டு அமைப்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் மதிப்பு ரூபாய் 2 லட்சம் என்றாலும் நான் சென்று நேரடியாக பார்த்திருந்தால் ரூபாய் 5 லட்சம் கொடுத்திருக்கமாட்டேன் என்றாலும் சரியல்ல. காசோலையை எனது அக்காவிடம் எதிரி கொடுத்தாரா என்றால் எனது அக்கா வீட்டில் வைத்து கொடுத்தார். பலமுறை எதிரியிடம் எங்கு வைத்து கடன் தொகையை திருப்பி கேட்டேன் என்றால் எனது அக்கா வீட்டிற்கு எதிரியை வரவழைத்து அங்கு கேட்டேன். நான் எதிரியின் வீட்டிற்கு சென்று கடனை கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

3. எந்தெந்த தேதியில் எதிரியை எனது அக்கா வீட்டிற்கு வரவழைத்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் கேட்கவில்லை என்றாலும் அவ்வாறு கேட்டிருந்தால் தேதி சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது சாட்சியத்தில் எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததாகவும் மற்றொரு முறை எனது அக்காவிடம்

காசோலையை கொடுத்ததாகவும் மாறுபட்டு சொல்லியுள்ளேன் என்றால் எனது அக்கா வீட்டில் வைத்து என் கையில் எதிரி காசோலையை கொடுத்தார். நான் முரன்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்காவின் நண்பர்களான இந்திரா, மோகனா, கவிதா, முத்துலட்சுமி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. எனது அக்காவை அழைத்து விசாரித்தால் உண்மை விவரங்கள் தெரியவரும என்றால் விசாரிக்கலாம். எனது அக்காவை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் எனது அக்கா முன்னிலையில் காசோலையை பெற்றேன் என்றாலும் பிரமாண வாக்குமூலத்தில் அக்காவை பற்றி சங்கதிகளை சொல்லி அவரை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

4. தற்போது வழக்கிற்காக புதிதாக சங்கதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக கடன் கொடுக்கும் நபர் கடன் வாங்கும் நபரின் வசதி மற்றும் முகவரி அறிந்துதான் கடன் கொடுப்பார் என்றாலும் மேற்படி விவரங்கள் தெரியாமல் நான் கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்கும்படி இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு தெரிந்த நபர் தான் எனது அக்கா வீட்டில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் தான் உள்ளார். எனது அக்காவிடம் கொடுக்கப்பட்ட காசோலையை நான் தவறுதலாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த கடன் சட்டப்பூர்வமாக கொடுக்கப்பட்ட கடன் இல்லை என்றால் சரியல்ல.